கூட்டுறவு நெசவாளர் சங்கம் (அருப்புக்கோட்டை)

4-00 p.m. *833 கேள்வி.—திரு டி. கதம்பவனசுந்தரம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டையில் நடத்தப்படும் 'Industrial co-operative weavers' society' விஸ்தரிக்கும் திட்டம் சர்க்காரிடம உண்டா?

(இ) அப்படியானல், விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) and (b) In 1959–60, the Government approved a scheme for the expansion of the activities of the Aruppukottai Industrial Weavers' Co-operative Society and sanctioned a loan of Rs. 63,500 and a grnat of Rs. 3,000 for implementing the scheme. The Society was not able to implement the scheme for want of suitable building to instal additional looms. The assistance sanctioned to the Aruppukottai Industrial Weavers' Co-operative Society was therefore withdrawn.

Schools (Urdu medium)

*834 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state the number of schools in the State district-war, having Urdu as medium of instruction, at Primary and Secondary stages?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement[a] is placed on the table of the House.

திரு மீ. கலியாணசுந்தரம்: உருது போதனு மொழியாக எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது? 'இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வகுப்புகள் போதாது' என்று திருச்சியிலுள்ள எந்த உயர்நிலைப் பள்ளியிலிருந்தாவது அரசாங்கத்திற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உருது மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களிடமிருந்து, 'எங்களுக்கு உருது போதனு மொழியாக இருக்க வேண்டும்' என்ற கோரிக்கை வந்தால் அந்த அடிப்படையில்தான் உருது போதனு மொழியாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட படி, 'வகுப்புகள் போதாது' என்று தெரிவித்த தகவல் என்னிடம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கக் கூடிய வகுப்புகளில் எத்தனை மாணவர்கள் படிக்கிருர்கள் என்ற தகவல் இப்பொழுது கனம் அமைச்சர் அவர்களுடைய கையில் இருக்கிறதா? எத்தனை ஆசிரியர்கள் உருது மொழி மூலம் கற்றுக் கொடுக்கிருர்கள் என்ற தகவல் கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் நான் பதில் அளிக்கிறேன்.

---

[a] Printed as Appendix I on page 106 infra.